
# ஆவி உலகம்

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்



# சவுலும் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 61-10-15 M கேள்விகளும் பதில்களும் COD #15

(ஒலிநாடாவில் முதலாம் பக்கம் முடிந்து இரண்டாம் பக்கம் தொடர்ச்சி இல்லாமல் தொடங்குகிறது - ஆசி).

...நியாயத்தீர்ப்படையாமல், மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசிக்கிறான்.

நான், "அதை நான் சொல்லவில்லை. அதை இயேசு கிறிஸ்து உரைத்தார்' என்றேன்.

அவர், "அப்படியானால் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். சவுல் இரட்சிக்கப்பட்டான் என்று நீங்கள் நம்புகிறீர்களா?" என்று கேட்டார்.

நான், "சவுல் ராஜாவா? என்று கேட்டேன். அவர் "ஆம்" என்றார்.

143. நான், "நிச்சயமாக" என்றேன்.

அவர். "இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள், அவன் ஒரு தீர்க்கதரிசி" என்றார்.

144. நான், "அது சரியே. அவன் தீர்க்கதரிசிகளுடன் சேர்ந்து தீர்க்கதரிசனம் உரைத்ததாக வேதம் கூறுகிறது (அவனுக்கு தீர்க்கதரிசன வரம் இருந்தது. அவன் ஒரு தீர்க்கதரிசியல்ல, ஆனால் அவனுக்கு தீர்க்கதரிசன வரம் இருந்தது. தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டிருந்தபோது இவன் அவர்களுடன் இருந்தான். ஆனால் சாமுவேல் அக்காலத்தில் தீர்க்கதரிசியாக இருந்தான் என்று நாமறிவோம். எனவே ...) சவுல் தீர்க்கதரிசிகளுடன் சேர்ந்து தீர்க்கதரிசனம் உரைத்தான்" என்றேன்.

அவர், "அவன் தீர்க்கதரிசியாயிருந்ததால், அவன் இரட்சிக்கப்பட்டானா?" என்று கேட்டார்.

நான், "நிச்சயமாக" என்றேன்.

அவர், "அப்படியானால் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். சவுல் இரட்சிக்கப்பட்டான் என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் வேதமோ, கர்த்தர் அவனை விட்டுப் போய் விட்டதாகவும், அவன் தேவனுக்கு சத்துருவானான் என்றும், அவன் தற்கொலை செய்து கொண்டான் என்றும் உரைக்கிறதே! அவன் இரட்சிக்கப் பட்டான் என்று எவ்விதம் கூற முடியும்?' என்றார்.

145. நான், "நீர் அடிப்படைக் கொள்கைக்காரரா (fundamentalist)? சகோதரனே, அதை நீர் சரியாக வாசிக்கவில்லை; அவ்வளவு தான். வேதம் கூறுவதை நீர் வாசிக்கவில்லை' என்றேன்.

அவர், "நல்லது. அவன் தேவனுடைய சத்துருவான பிறகு இரட்சிக்கப்பட முடியாது" என்றார்.

நான், "சவுல் இரட்சிக்கப்பட்டான் என்றேன்.

அவர், "ஓ!" என்றார்.

146 நான், "அவன் தீர்க்கதரிசியாயிருந்தால், அவன் இரட்சிக்கப்பட வேண்டும். பாருங்கள்? தேவன் அவனை இரட்சித்தார். நாம் வழக்கமாக கூறுவது போல, தேவன் சிகப்பு இந்தியர் கொடுப்பது போல் கொடுப்பவர் அல்ல. அவர் அவ்விதம் செய்வதில்லை... நல்லது. உங்களை அவர் இழக்கப் போகிறார் என்று அறிந்து கொண்டே தேவன் உங்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பாரானால், பரிசுத்த ஆவியை அவர் முதற்கண் கொடுத்ததே எத்தகைய மூடச் செயலாயிருக்கும்!" என்றேன்.

147. நீங்கள் பரிசுத்த ஆவியைப் பாவனை செய்து, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டது போல் நடிக்கலாம். ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பீர்களானால், தேவன் உங்கள் ஆதி முதல் அந்தம் வரைக்கும் அறிந்திருக்கிறார். அது உண்மை! அது வியாபாரத்தை தளர்ந்த முறையில் நடத்துவது போலிருக்கும். தேவன் அவ்விதம் நடத்துபவரல்ல. அவர்

முடிவற்றவர். அவர் தொடக்கம் முதல் முடிவு வரைக்கும் எல்லாவற்றையும் அறிந்திருப்பவர். இங்கு என்னென்ன இருக்கும் என்பதை முன்கூட்டியே அறிந்தவர். பூமியில் இருக்கப் போகின்ற ஒவ்வொரு மலரையும், ஒவ்வொரு சிறு பூச்சியையும், உலகத் தோற்றத்துக்கு முன்பே அவர் அறிந்திருந்தார். எனவே பாருங்கள், அவருடைய அலுவலை அவர் ஏன் அவ்விதம் நடத்த வேண்டும்? அவர் அவ்விதம் செய்வதில்லை.

148. நீங்கள் கவனிப்பீர்களானால், நீங்கள் நித்தியமாக இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள். அதை நான் வேதவாக்கியங்களைக் கொண்டு நிரூபிக்க முடியும். நாம் அதை எத்தனையோ முறை செய்திருக்கிறோம். ஆனால் மற்ற கேள்விகளுக்கு பதிலளிக்க நாம் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையில், இதை மட்டும் கூற விரும்புகிறேன். அந்த ஆள் என்னிடம், "நல்லது, சவுலைக் குறித்து என்ன சொல்கிறீர்கள்?" என்றார்.

149. நான், 'நிச்சயமாக சவுல் இரட்சிக்கப்பட்டான்" என்றேன். நான் தொடர்ந்து, சவுல் பின்மாற்றமடைந்தான் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அவன் பின் மாற்றமடைந்து தேவனை விட்டு விலகிப் போனான். ஏனெனில் அவன் பேராசை பிடித்தவன். அவனுக்கு பண ஆசை இருந்தது என்றேன். எல்லாவற்றையும் அழித்துப் போட வேண்டும் என்று சாமுவேல் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அவனை எச்சரித்திருந்த போதிலும், அவன் பலிகளைக் கொண்டு வந்தான். அவன் ராஜாவையும் கூட காப்பாற்றினான், அவன் நிறைய பொருட்களை அழிக்காமல் கொண்டு வந்தான். ஏனெனில் பாருங்கள்? தேவனுடைய வார்த்தை உரைக்கிறபடியே, அதை பின்பற்றுவதற்கு பதிலாக, உங்கள் சொந்த கருத்துக்களை அதில் நுழைத்து விடுகிறீர்கள். அங்கு தான் நீங்கள் பின்மாற்றமடைகிறீர்கள்.

150. ஸ்தாபனங்களையும் மற்றவைகளையும் குறித்து நான்

கொண்டுள்ள கருத்து அதுவே அவர்கள் வார்த்தையைப் பின் பற்றாத காரணத்தால் பின் மாற்றமடைகின்றனர். நீங்கள் வார்த்தையை அவர்களுக்கு எடுத்துக் காண்பித்தால், அவர்கள் அதற்கு புற முதுகு காட்டி, "ஓ, எங்கள் சபை இதை தான் போதிக்கிறது" என்கின்றனர். அது சரியல்ல, தேவன் உரைத்துள்ளதே முக்கியம் வாய்ந்தது.

151. சாமுவேல், இல்லை சவுல், அங்கு சென்று எல்லாவற்றையும் முழுவதுமாக அழித்துப் போடும்படிக்கு கட்டளை பெற்றான். அதை செய்வதற்கு பதிலாக அவன் பலிக்காக சிலவற்றை சேகரித்தான், அவன் ராஜாவின் உயிரையும் காப்பாற்றினான், எல்லாவற்றையும் செய்தான். சாமுவேல் அவனிடம் நடந்து சென்று, தேவனுடைய ஆவி அவனை விட்டுப் போய் விட்டதாகக் கூறினான் - அப்படி எல்லாமே.

152. சாமுவேல் மரித்தான். இரண்டு ஆண்டுகள் கழித்து சவுலுக்கு... தேவனுடைய ஆவி அவனை விட்டுப்போய் விட்டது,

ஆனால் அவன் இழக்கப்படவில்லை. நிச்சயமாக இழக்கப்படவில்லை, அபிஷேகம் அவனை விட்டுப் போய் விட்டது. இப்பொழுது கவனியுங்கள், என்ன நடந்ததென்று.

153. சவுல், வெகு தூரம் கர்த்தரை விட்டு விலகிப் போன பிறகு, அவன் யுத்தத்துக்கு சென்றான். அவன் யுத்தத்துக்கு செல்ல ஆயத்தமானான். யுத்தத்துக்கு செல்வதைக் குறித்து அவன் கவலை கொண்டான். அவன் கர்த்தரிடத்தில் ஒரு சொப்பனம் தரும்படி கேட்டான். கர்த்தர் அவனுக்கு எந்த சொப்பனமும் அருளவில்லை. அந்நாட்களில் தேசத்தில் தீர்க்கதரிசிகள் எவரும் இருக்கவில்லை. சாமுவேல் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். தீர்க்கதரிசனம் உரைப்பவர்கள் அவர்களுக்கு இருந்தனர். ஆனால் தேவனிடத்திலிருந்து பதில் கிடைக்க அவர்களுக்கு எந்த வழியும் இருக்கவில்லை. அவன் ஊரிம் தும்மீமிடத்திற்கும் சென்று அங்கு கேட்டான். ஊரிம் தும்மிமின் மின்னல் பிரகாசம் கூட அவனுக்கு பதிலளிக்கவில்லை.

அவன் என்ன செய்தான்? அவன் ஒரு குகைக்குள் ஊர்ந்து சென்றான். அங்கே அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீ இருந்தாள், குறி சொல்லும் ஒருத்தி. அஞ்சனம் பார்க்கிற இவள்.... அவன் வேலைக்காரனைப் போல வேஷம் மாறி அவளிடம் சென்று, "நீ தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் ஆவியுடன் எனக்காக தொடர்பு கொள்வாயா? என்று கேட்டான்.

அவள், "நல்லது, சவுல் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?" (அவள் சவுலிடம் பேசிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் அதை அறிந்திருக்கவில்லை) "அவர் அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறி சொல்லுகிறவர்களையும் கொன்று போடுவதாக சொல்லியிருக்கிறாரே" என்றாள்.

அவன், "நான் சவுலிடமிருந்து உன்னைக் காப்பாற்றுவேன். நீ. எனக்காக சாமுவேலின் ஆவியுடன் தொடர்பு கொள்" என்றான்.

எனவே அஞ்சனம் பார்க்கிற அந்த ஸ்திரீ தன் மந்திர சக்தியால் செயல்படத் தொடங்கினாள். முதலாவதாக என்ன தெரியுமா, சாமுவேல் எழும்பி வருவதை, அவனுடைய ஆவி வந்து, அவர்களுக்கு முன்பாக காணக்கூடிய ரூபமாக ஆனதை அவள் கண்டபோது, அவள், "தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறி வருவதைக் காண்கிறேன்" என்றாள்.

154. அது ஆறுதலாக இருந்தது. வயோதிப சாமுவேல் அங்கு நின்று கொண்டிருப்பதைப் பாருங்கள். அவன் மரித்து இரண்டு ஆண்டுகளாயின. ஆனால் அவன் நின்றுகொண்டிருந்தான். அது மாத்திரமல்ல... அவன் தன் தீர்க்கதரிசியின் அங்கியுடன் அங்கு நின்று கொண்டிருந்தான். அவன் உயிரோடிருந்தது மாத்திரமல்ல, அவன் அப்பொழுதும் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். அல்லேலூயா!

அவள், சவுலிடம், "நீர் என்னை ஏமாற்றி விட்டீர்" என்றாள்.

சவுல்," சாமுவேலே, எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை; நான் நாளைக்கு யுத்தத்துக்குப் போகிறேன் , கர்த்தருடைய ஆவி என்னை விட்டுப் போய்விட்டது. எனக்கு கர்த்தரிடத்திலிருந்து ஒரு சொப்பனம் கூட கிடைக்கவில்லை. ஊரிம் தும்மீமும் கூட என்னிடம் பேச மறுக்கின்றன. நான் பயங்கரமான நிலையில் இருக்கிறேன் என்றான்.

155. சாமுவேல் சவுலிடம், "நீ தேவனுக்கு சத்துருவாய் இருக்க, என்னை ஏன் என் இளைப்பாறுதலிலிருந்து வெளியே அழைத்தாய்?" பாருங்கள்? சாமுவேல் அவ்விதம் கூறினான். அவன் தொடர்ந்து மற்றவைகளைக் கூறினான். அவன் சொன்னான். எவ்வாறாயினும், அவன் கர்த்தருடைய வார்த்தையை அவனுக்கு உரைத்தான். அவன் அவ்விதம் செய்தபோது... ஞாபகம் கொள்ளுங்கள், அவன் மரித்து இரண்டு ஆண்டுகளாகி விட்டன. பாருங்கள்? ஆனால் அவன், "நான் வார்த்தையை உரைக்கிறேன் என்றான்.

அவன் அவனிடம் கர்த்தருடைய வார்த்தையை உரைத்தான். அவன், "நாளைக்கு நீ யுத்தத்தில் மடியப் போகிறாய், உன் குமாரனாகிய யோனத்தானும் உன்னுடன் மடியப் போகிறான். நாளை இரவு இந்நேரம் நீ என்னோடிருப்பாய்" என்றான். அவன் இழக்கப்பட்டிருந்தால், தீர்க்கதரிசியாகிய சாமுவேலும் இழக்கப்பட்டிருக்க வேண்டும். அது அடிப்படை கொள்கை (fundamentalism); அது ஏன் அவ்விதம் அழைக்கப்படுகிறதென்று காண்கிறீர்களா? பாருங்கள், பாருங்கள்? அவன், "நாளை இரவு இந்நேரம் நீ என்னோடிருப்பாய்" என்றான். பாருங்கள்? சவுல் இழக்கப்பட்டிருந்தால், சாமுவேலும் இழக்கப் பட்டிருக்க வேண்டும். ஏனெனில் இருவருமே ஒரே இடத்தில் இருந்தனர்.

156. இல்லை, இல்லை! அடிப்படை கொள்கைக்காரரே, நீங்கள்... அடிப்படை கொள்கைக்காரர் என்று அழைக்கப்படுபவரே, கிறிஸ்தவ சபை என்று அழைக்கப்படுபவரே.

கிறிஸ்தவர் என்று அழைக்கப்படுபவரே - கிறிஸ்தவ மார்க்கம் என்று அழைக்கப்படுவது. இன்றைக்கு நீ அமெரிக்கனாயிருப்பதால் நீ கிறிஸ்தவன் என்று கருதப்படுகிறாய். பார்? அது கிறிஸ்தவ மார்க்கம் என்று அழைக்கப்படுவது. ஆனால் ஒரு உண்மையான கிறிஸ்தவர் என்னப்படுபவர் ஆவியினால் மறுபடியும் பிறந்த ஆணும் பெண்ணுமாவர். அதுவே உண்மையில்... மற்ற இவர்கள் பாவனை செய்பவர்கள், ஆனால் உண்மை கிறிஸ்தவர்கள் தேவனால் அழைக்கப்பட்டவர்கள்.



# பாதாளத்தின் திறவுகோலோடு இயேசு



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 57-04-20 கல்லறையிலிடுதல்

69. இப்பொழுது அவருக்கு என்ன சம்பவித்தது? அவர் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புவின் கல்லறையில் வைக்கப்பட்டபோது, அவர் எங்கே சென்றார்?

70. அவர் மிகவும் தரித்திரராயிருந்தார். அவருக்கு தம்முடைய தலையைச் சாய்க்க ஒரு இடமும் இல்லாதிருந்தது. அவர் ஒரு முறைதவறிப் பிறந்த பிள்ளை என்ற ஒரு முறைகேடான பெயரை தனக்கு பின்னே கொண்டவராக அவர் ஒரு முன்னணையில் பிறந்தார். அவர் பூமியிலே நகைக்கப்பட்டார், வேடிக்கையாக்கப்பட்டார், பரியாசம் பண்ணப்பட்டார். அவர் வேடிக்கையாக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டார். அவர் மரித்த போது அவர் இரண்டு கள்வர்களுக்கு மத்தியிலே

தலையாய தண்டனையான சிலுவை மரணத்தினூடாகவே மரிக்க வேண்டியதாயிருந்தது. அவரை அடக்கம் பண்ண ஓர் இடம்கூட இல்லாதிருந்தது. அவர் மற்றொரு மனிதனுடைய கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். அதே பரலோகத்தின் தேவன்தாமே பூமிக்கு வருகிறாரே! நாம் ஒரு சிறு துன்பத்தினூடாக செல்ல வேண்டும் எனும்போது நாம் யாருக்காக அவ்வாறு செய்கிறோம் என்று நாம் எண்ணிப் பார்க்கிறோமா? அவர் நமக்காக எத்தகையக் காரியத்தை செய்துவிட்டாரே! நண்பனே, அதைக் குறித்து எண்ணிப் பார்த்து, அதைக் குறித்து ஆராய்ந்துபார்.

71. ரோம போர்ச்சேவகனோ, "மெய்யாகவே அது தேவ குமாரன்தான்" என்றான். பாவியும் அதனை அடையாளங் கண்டுகொள்ள வேண்டியதாயிருந்தது. யூதாஸ், ''நான் குற்றமில்லாத இரத்தத்தை காட்டிக் கொடுத்து விட்டேனே" என்றான். அவன் அதை அடையாளங்கண்டு கொள்ள

வேண்டியதாயிருந்தது. முழு பூமியும் அதை அடையாளங்கண்டு கொண்டது.

72. அதன் பின்னர் அவர் எங்கே சென்றார்? ஒரு மனிதன் மரிக்கிறபோது, அது இதனை முடித்து விடுகிறதா? இல்லை ஐயா. அவர் அந்த விதமாக மரிக்க வேண்டியதாயிருந்தது. ஏனென்றால் அவர் அந்தவிதமாக மரிப்பார் என்று தேவனுடைய வேதம் கூறியிருந்தது. அவர் தேவனுடைய வார்த்தையை நம்பியிருந்தார். அந்தக் காரணத்தினால் அவரால் தன்னுடைய ஜீவியத்தில், ''இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்” என்று கூறமுடிந்தது.

73. ஏனென்றால் தாவீது ஆவியின் ஏவுதலின் கீழ் வேதாகமத்தில் ஓர் இடத்தில் மட்டுமே கூறினான். வார்த்தையினால் அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசியாகிய தேவனுடைய மனுஷன் தாவீது கூறும்போது, ''என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்” என்றான்.

74. இயேசு, "இந்தச் சரீரத்தை அழித்துப் போடுங்கள், மூன்று நாட்களுக்குள்ளே நான் இதை எழுப்புவேன்" என்றார். தேவனுடைய வார்த்தைத் தவறிப்போக முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். ஓ, என்னே !

75. அவரால் அதின்பேரில் பயபக்தியாய் சார்ந்திருக்க முடிந்ததென்றால், தேவனுடைய வார்த்தை தவறிப்போக முடியாது என்று விசுவாசிக்க முடிந்ததென்றால், நாம் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்திருக்கிறோம் என்றும், அது நம்முடைய இருதயத்தில் நம்முடைய மீட்பர் ஜீவிக்கிறார் என்பதை இப்பொழுதே நாம் அறிந்துள்ளோம் என்பதற்கு ஒரு சாட்சியுள்ள தென்றும், என்றோ ஒரு நாளில் அவர் மீண்டும் வருவார் என்பதின் பேரிலும் நாம் எவ்வளவு அதிக பயபக்தியோடு சார்ந்திருக்க முடியும். கிறிஸ்துவுக்குள்ளிருப்பவர்களைத் தேவன் அவரோடே கொண்டு வருவார் என்று நிச்சயமாக நம்பியிருக்கிறோம். இப்பொழுது கவனியுங்கள்.

76. அங்குதான் அவர் இருந்தார். அந்த சரீரத்தின் ஒரு உயிரணுவும் அழிந்து போகக் கூடாது என்பதை அவர் அறிந்திருந்தார். எழுபத்திரண்டு மணி நேரத்தில் அதற்கு அழிவு உண்டாகின்றது. அந்தக் காரணத்தினால் தான் அவர் ஒருபோதும் மூன்று நாட்கள் தரித்திருக்கவே இல்லை. அவர் வெள்ளிக்கிழமை பிற்பகல் மரித்து, ஞாயிற்றுக்கிழமை காலையில் உயிர்த்தெழுந்தார். ஆனால் அது மூன்று நாட்களுக்குள் சம்பவித்தவையாயிருந்தது. அந்த மூன்று நாட்களுக்குள் அவர் மீண்டும் உயிரோடு எழவேண்டியதாயிருந்தது; ஏனென்றால் அவர் தேவனுடைய வார்த்தையை நம்பியிருந்தார்.

77. இதோ அவர் செல்கிறாரே! அவர் ஜீவனை விட்டபோது, அவர் எங்கே சென்றார்? வேதம், "அவர் ஏறினார், அவர் நோவாவின் காலத்தில் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, மனந்திரும்பாமற்போன காவலில் உள்ள ஆத்துமாக்களுக்குப் போய் பிரசங்கித்தார்"

என்று கூறியுள்ளது. அவருடைய ஆத்துமா, அவருடைய ஆவி, அவருடைய சொந்த ஆவிக்குரிய சரீரம் கீழே சென்றது. நாம் அவரைப் பின்தொடருவோமாக. இன்றிரவு ஒரு சில நிமிடங்கள் நீங்கள் அவரைப் பின்தொடர்ந்து செல்ல விரும்புவீர்களா? அவர் எங்கே சென்றார் என்பதை நாம் காண்போமாக.

78. மானிட வர்க்கங்கள் வாழும் பகுதிக்கு கீழே பிசாசின் அதிகார எல்லை உள்ளது. அதற்குக் கீழே இதற்குச் சற்று மேலே அநீதியுள்ள ஆத்துமாக்கள் இருக்கின்றன. இதற்குக் கீழேதான் சாத்தானின் இராஜ்ஜியம், பாதாளம் உள்ளது. பரிசுத்த ஆவியானவரோ நமக்கு மேலே இருக்கிறார். அதற்குக் கீழே உள்ள பலிபீடத்தில் நீதிமான்களின் ஆத்துமாக்கள் உள்ளன. அதன் பின்னர் தேவன் தாமே எல்லாவற்றிற்கும் மேலே இருக்கிறார். ஒன்று கீழ்நோக்கிச் செல்கிறது. ஒன்று மேல் நோக்கிச் செல்கிறது. பூமியின் மேல் உள்ள இரண்டு

ஆவிகளே இந்தப் பூமியில் உள்ள ஜனங்களை இயக்குகின்றன.

79. இயேசுவானவர் மரித்தபோது, அவர் அங்கே கீழே உள்ள பிசாசின் மண்டலத்திற்கு மேலே செல்கிறார். வெள்ளிக் 'கிழமைப் பிற்பகல் அவருடைய மரணத்திற்குப் பிறகு அவர் (சகோதரன் பிரான்ஹாம் தட்டுகிறார் - ஆசி] இழக்கப்பட்டோரின் ஸ்தலத்தின் வாசலைத் தட்டுவதை என்னால் காண முடிகிறது. நாம் அவரை ஒரு நிமிடம் பின்தொடருவோமாக. வாசல் திறக்கிறது. அங்கே ஸ்திரீகள் இருந்தனர். அங்கே புருஷர்கள் இருந்தனர். அங்கே வாலிப ஸ்திரீகள் இருந்தனர். அங்கே வயோதிகர்களும் இருந்தனர். அவர்கள் எல்லோருமே இழக்கப்பட்ட ஆத்துமாக்களின் சிறையிருப்பு என்றழைக்கப்பட்ட அந்தப் பயங்கரமான இடத்தில் இருந்தனர்.

80. எனக்கு நேரமிருந்திருந்திருந்தால் நான் அதை உங்களுக்கு கூறியிருப்பேன். அது ஒரு தரிசனமாயிருக்கலாம். ஆனால் ஒரு

சமயம் நான் பாவியாயிருந்தபோது, எனக்கு அறுவை சிகிச்சை நடந்தபோது, அந்த ஸ்தலத்திற்கு சென்றேன். அப்பொழுது நான் இரக்கத்திற்காகக் கூக்குரலிட்டேன். நான் தரிசனத்திலிருந்து தெளிந்தபோது, நான் மேற்கு திசையில் என் கைகளை வானத்தை நோக்கியவாறு மேலே உயர்த்திக் கொண்டு நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு சிலுவையின் ஒளி என் மேல் பிரகாசித்தது.

81. ஆனால் அங்கே அந்தத் துக்ககரமான ஸ்தலத்தில் உள்ள வாசலண்டை இயேசுவானவர் நடந்து சென்றார். அவர் தேவ குமாரனாயிருந்தார் என்று ஒவ்வொரு காரியமும் சாட்சி பகரவேண்டியதாயிருந்தது. ஏனென்றால் நோவாவின் நீடிய பொறுமையான நாட்களில் அவர்களுக்கு பிரசங்கிக்கப்பட்டிருந்தது. வாசலைத் தட்டுகிறார், அவர், "ஏனோக்கு ஒருவரைக் குறித்துப் பேசினானே, அவர்தான் நான். நான் சர்ப்பத்தின் தலையை நசுக்க வேண்டியதாயிருந்த ஸ்திரீயின் வித்தாயிருக்கிறேன். ஒவ்வொரு தேவனுடைய

வார்த்தையும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நான் அப்பால் உள்ள கல்வாரியில் மரித்தேன். நான் என்னுடைய சபையை கிரயத்திற்குக் கொண்டேன். ஏனோக்கு ஒருவரைக் குறித்து பேசினானே, நான்தான் அவர்" என்றார். அவர்கள் இரக்கமின்றி, நம்பிக்கையின்றி இருந்தனர். ஏனென்றால் அவர்கள் மீறி நடந்திருந்தனர். அவர்களுடைய முகத்திற்கு முன்னரே வாசலானது அடைக்கப்பட்டது.

82. அதற்கு கீழ்ப்பகுதியோ பிசாசுகளின் மண்டலமாயிற்றே! அதற்கும் கீழே பாதாளத்தின் வாசல்களாயிற்றே! அவர் வாசலைத் தட்டுகிறார். (சகோதரன் பிரான் ஹாம் தட்டுகிறார் - ஆசி.]

83. அவர் கல்லறையில் இருந்தபோது, அவருடைய சரீரம் உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. அப்பொழுது அவர் நீதியுள்ளோரும், அநீதியுள்ளோரும் செல்கிற ஸ்தலங்களுக்கு விஜயம் செய்தார். இந்நாட்களில் ஒன்றில் நீங்கள் ஒன்று இந்த

ஸ்தலத்திற்கு அல்லது மற்றொரு ஸ்தலத்திற்கு செல்வீர்கள்.

84. அவர் பாதாளத்தின் வாசலைத் தட்டுகிறார். (சகோதரன் பிரான்ஹாம் தட்டுகிறார் - ஆசி.) அவர் தட்டின போது பிசாசே வந்தான். அப்பொழுது அவன், "ஓ, முடிவாக நீ இங்கேயே வந்துவிட்டாயே. நான் ஆபேலைக் கொன்றபோதே, நான் உன்னைக் கொன்றுவிட்டேன் என்று நிச்சயமாகவே எண்ணியிருந்தேன்” என்று அவன் கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

85. நீங்கள் பாருங்கள், அந்த வித்து ஏதேன் தோட்டத்தில் வாக்களிக்கப்பட்டபோது, பிசாசு அந்த வித்தை அழிக்கத் தொடர்ந்து முயன்று வந்தான். ஆபேலின் மரணமும், சேத்தின் வருகையும், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலாயிருந்தது. அந்த வித்து தொடர்ந்து வரவேண்டும். அவனோ அதை அழிக்க முயற்சித்தான்.

86. அவன், ''நான் ஆபேலைக் கொன்றபோது, உன்னை அழித்து விட்டேன் என்றே எண்ணியிருந்தேன். நான் தீர்க்க தரிசிகளைக் கொன்றபோதே, உன்னை அழித்துவிட்டேன் என்றே எண்ணிக் கொண்டேன். நான் யோவானைச் சிரச்சேதம் பண்ணினபோதே, உன்னை அழித்துவிட்டேன் என்ற நிச்சயத்தோடு இருந்தேன். ஆனால் இப்பொழுதோ எல்லாவற்றிற்கும் பிறகே நீ வந்துள்ளாய். நான் இப்பொழுது உன்னை வென்று விட்டேன்" என்றான். ஓ, என்னே!

87. அவர், ''சாத்தானே, இங்கே வா" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது. அவர் இப்பொழுது எஜமானாயிருக்கிறார். சாத்தானின் பக்கவாட்டில் தொங்கிக் கொண்டிருந்த மரணத்திற்கும், பாதாளத்திற்கும் உரிய அந்தத் திறவுகோலை அவர் தம்முடைய கரம் நீட்டி பற்றிப் பிடிப்பதை என்னால் காண முடிகிறது. மேலும் அவர், ''நான் உன்மீது சட்டப்பூர்வமான முன்னறிவிப்பைத்

தெரிவிக்க விரும்புகிறேன். நீ இவ்வளவு காலம் முழுமையாக பொய்யுரைத்து ஏமாற்றி வந்தாய். நான் ஜீவனுள்ள தேவனுடைய கன்னிப்பிறப்பின் குமாரனாயிருக்கிறேன். என்னுடைய இரத்தம் இன்னமும் சிலுவையில் ஈரக்கசிவோடு உள்ளது. முழு கடனும் செலுத்தப்பட்டாயிற்றே! உனக்கு இனிமேல் எவ்வித உரிமையுமே கிடையாது. நீ துகிலுரியப்பட்டிருக்கிறாய். அந்தத் திறவுகோல்களை என்னிடம் கொடு" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது. அது உண்மை, மேலும் அப்படியே சுற்றித்திரும்பி தன்னுடைய காலினால் ஒரு நல்ல வலுவான உதையை அவனுக்கு கொடுத்து, கதவை வேகமாக இழுத்து அடித்து மூடி விட்டு, ''அங்கேயே தரித்துக்கிட", இது முதற் கொண்டு நான்தான் எஜமான் என்ற கூறவதையும் என்னால் கேட்க முடிகிறது.

88. இப்பொழுது, அவர் இராஜ்ஜியத்திற்கான திறவுகோல்களை உடையவராயிருக்கவில்லை. ஏனென்றால் அவர் அவைகளை பேதுருவினிடத்தில்

கொடுத்துவிட்டார். நாம் எல்லோரும் அதைக் காலையில் தண்ணீர் ஞானஸ்நானத்தில் புரிந்து கொண்டோம். ஆனால் அவர் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருந்தார். அவர் அவைகளை எடுத்துக்கொண்டார்; அவர் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர், ''நான் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" என்றார். பேதுருவோ பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை உடையவனாயிருந்தான். சாத்தான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உயைடவனாயிருந்தான்; ஆனால் இப்பொழுதோ இயேசு அவைகளைப் பெற்றுக் கொண்டு, அவரே எஜமானாயிருக்கிறார்.

89. இதோ அவர் எழும்பத் துவங்குகிறார். இது ஈஸ்டர் தினமாயுள்ளது. நேரமோ துரிதமாகக் கடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அங்கு மற்றொரு குழு இருக்கிறது. யோபு எங்கே

யிருக்கிறான்? ஆபிரகாம் எங்கே இருக்கிறான்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? தேவனுடைய வார்த்தையை நம்பியிருந்த அந்த நபர்கள் எங்கேயிருக்கின்றனர்? அவர் அவர்களை மறந்து விட்டாரா? மரணம் அவர்களை அடியோடு அழித்துப்போட்டு விட்டதா? அதைக் குறித்தெல்லாம் அவ்வளவு தானா? இல்லையே, இல்லவே இல்லை. தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்ள வேண்டியவராயிக்கிறார்.

90. என்னால் அவரைக் காணமுடிகிறது. நாம் பரதீசுக்குள்ளாக ஒரு சிறு கண்ணோட்டமிடும்படியாக அங்கு நோக்கிப்பார்ப்போமாக. சாராளும், ஆபிரகாமும் சுற்றி நடந்து வருவதை நான் காண்கிறேன். கொஞ்சங்கழித்து (சகோதரன் பிரான்ஹாம் தட்டுகிறார் - ஆசி.] யாரோ ஒருவர் வாசலண்டை நிற்கிறார். அப்பொழுது ஆபிரகாம் சென்று கதவைத் திறந்து, ''தேனே, இங்கே வா. இங்கே பார். அந்த நாளில் சிந்தூர மரத்தின் கீழே என்னோடு நின்ற அந்த

ஒருவர் இவர்தான்" என்றான். அவர் ஆபிரகாமினுடைய தேவனாயிருந்தார்.

91. அதன் பின்னர் தானியேல் அவருடைய தோளைப் பார்த்து, "நான் இங்கே நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாய், கைகளால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்த அந்தக் கல்தான் அது" என்று கூறுவதை என்னால் காணமுடிகிறது.

92. யோபு எழும்பி, "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், என்றோ ஒருநாள் அவர் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிவேன் என்று நான் கூறின என்னுடைய மீட்பர் அவரே. என்னுடைய சரீரம் ஒன்றுமேயில்லாமல் ஒரு சிறு கரண்டியளவு கொண்ட சாம்பலாயிருக்கலாம். ஆனால் இப்பொழுதிலிருந்து இன்னும் பதினைந்து நிமிடத்திற்குள்ளாக, நான் என் சரீரத்தை மீண்டும் பெற்று அதில் இருப்பேன். அது அவரேதான்" என்று கூறுவதை நான் காண்கிறேன்.

93. எசேக்கியேல் அங்கு மேல் நோக்கிப் பார்த்து, "நான் இதே நபரைத்தான் பூமியிலிருந்து ஆகாயத்திற்கு எழும்பின சக்கரத்தின் நடுவில் உள்ள சக்கரத்தில் கண்டேன்" என்றான். ஓ, என்னே !

94. அதன் பின்னர் ஏனோக்கு வருகிறான். ஏனோக்கு, "நியாயத்தீர்ப்புக் கொடுக்க ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடு அவர் வருகிறதை நான் கண்டேன்" என்றான்.

95. அங்கே பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் காத்துக் கொண்டிருந்தனர். நிச்சயமாகவே அவர்கள் பாவநிவர்த்தியின் இரத்தத்தின் கீழ் இருந்தனர். அவர்களால் தேவனுடைய சமூகத்திற்குள், பரலோகத்தின் தேவனண்டைச் செல்ல முடியவில்லை. ஏனென்றால் வெள்ளாடு மற்றும் செம்மறியாட்டின் இரத்தமானது பாவத்தைப் போக்க முடியாதிருந்தது.

96. ஆனால் அவர், "என் சகோதரர்களே, நீங்கள் நினைக்கிற அந்த ஒருவர் நான்தான்.

நான் ஸ்திரீயின் வித்தாயிருக்கிறேன். நான் தாவீதின் குமாரனாயிருக்கிறேன். நான் தேவ குமாரனாயிருக்கிறேன். நான்தான் அந்தக் கன்னிப் பிறப்பான ஒருவர். என்னுடைய இரத்தம் அதற்காக பாவநிவர்த்தி செய்துள்ளது. நீங்கள் செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டின் இரத்தத்தின் கீழ் காத்திருந்தீர்கள். ஆனால் இப்பொழுதோ என்னுடைய இரத்தம் பாவநிவர்த்தி செய்கிறது. எனவே நீங்கள் விடுதலையாகியிருக்கிறீர்கள். நாம் மேலே எழும்பிச் செல்வோமாக. ஏறக்குறைய உயிர்த்தெழுதல் நெருங்கிக் கொண் டிருக்கிறது" என்றார். இன்றிரவு ஆயிரத்து தொளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சம்பவித்ததைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள்.

97. ஆபிரகாம், ஆண்டவரே, நாங்கள் மீண்டும் எங்களுடைய சரீரத்தில் எழும்பி வருவதை சாராளும் நானும் அவ்வளவாய் விரும்பினோம். நாங்கள் உம்முடைய பாதையில் செல்லும்போது, சில இடத்தில்

நாங்கள் சற்று நின்று பார்ப்போமேயானால், நீர் அதை விரும்புவீரா?'' என்று கேட்பதை என்னால் கேட்க முடிகிறது.

98. அதற்கு அவரோ, "ஏன் விரும்பமாட்டேன், நிச்சயமாக விரும்பாமலிருப்பேனா? நான் என்னுடைய சீஷர்களோடு ஏறக்குறைய நாற்பது நாட்கள் தரித்திருக்கப் போகிறேன். எனவே சுற்றும் முற்றும் பாருங்கள். ஒவ்வொரு காரியமும் எப்படிக் காணப்படுகிறது என்று பாருங்களேன்!'' என்று கூறுவதை என்னால் கேட்கமுடிகிறது.

99. அந்த மகிமையான உயிர்த்தெழுந்த ஈஸ்டர் காலையில் (கர்த்தருக்கு சித்தமானால் நாம் யாவரும் அந்தக் காலையில் எடுத்துக் கொள்ளப்படுவோம்.) அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபோது, பரி. மத்தேயு 27ம் அதிகாரத்தின்படி, ''பூமியின் தூளிலே நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்கள் எழும்பி கல்லறைகளை விட்டு வெளியே வந்தனர்" என்று வேதம் கூறியுள்ளது. அது யாராயிருந்தது?

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோபு, என்றோ ஒரு நாள் மீட்பர் பூமியின்மேல் நிற்பார் என்று ஆவிக்குரிய பிரகாரமாய் வெளிப்படுத்தப்பட்ட வெளிப்பாட்டின் மூலமாய் அவர்கள் அதை அறிந்திருந்தனர். அது அவர்களாய், அந்த நித்திரையடைந்திருந்தவர்களின் முதற்பலனாயிருந்தது. அவர்கள் அங்கே நகரத்திற்குள் நடந்து சென்றனர். சாராளும், ஆபிரகாமும் முழு ........ வாலிபமாக, அழகாக, முழுமையான ஜீவனைக் கொண்டவர்களாக, இனி ஒருபோதும் வயோதிபமடையாதவர்களாக, இனி ஒருபோதும் சுகவீனமடையாதவர்களாய், இனி ஒருபோதும் பசியடையாதவர்களாய் தங்களுடைய சரீரங்களில் சுற்றி நடந்து வருவதை என்னால் காணமுடிகிறது.

100. காய்பாவோ அங்கு நின்றுகொண்டு, "என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? அன்றொரு நாள் அங்கே ஏதோ ஒரு காரியம் சம்பவித்ததாயிருந்தது. இந்தத்

தேவாலயத்திற்குள்ளே காணப்படுகிற இந்த அலங்கோலத்தை சற்று பாருங்களேன்! அங்கே உள்ள ........ நாம் யாராவது ஒருவரைக் கொண்டுவந்து அந்த தேவாலய திரைச்சீலையை தைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அந்தப் பலிபீடம் நிலைமாறி கவிழ்க்கப்பட்டதைப் பாருங்கள். என்ன சம்பவித்தது? அந்த ஆள் ஜோதிடராயிருந்தாரா? அவர் ஒரு சூனியக்காரராயிருந்தாரா? இல்லையென்றால் என்ன சம்பவித்தது? ஜோசியஸ் இங்கே வா, அங்கே நின்றுக் கொண்டிருக்கிற அந்த வாலிபத் தம்பதியினர் யார்? என்று சொல்லுங்களேன்!'' என்கிறான். ஆபிரகாமோ, ''சாராளே, நாம் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டுவிட்டோம். எனவே நாம் இங்கிருந்து வெளியேறுவதே மேலானது" என்று கூறினான்.

101. ''அநேகருக்கு காணப்பட்டனரே!'' அவர்கள் யாவருக்கும் காணப்படவில்லை. முடிவிலே கவனியுங்கள். அவர்

உயிர்த்தெழுந்த பிறகு ஒரு நாள், அவர்கள் விஜயம் செய்தனர். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு அவர்கள் யாவரும் அந்தத் தாய்நாட்டிற்கு விஜயம் செய்தனர். இயேசுவானவர் உன்னதத்திற்கு ஏறிப்போகையில் ......

102. நீங்களோ, “சகோதரன் பிரான் ஹாம், அது கற்பனையா?” என்று கேட்கலாம். இல்லை ஐயா! நான் இன்னும் ஒரு நிமிடத்தில் அதற்கான வேத வாக்கியங்களை உங்களுக்கு காண்பிக்கவுள்ளேன்.

103. அவர் மேலேறிச் செல்லத் துவங்கும்போது, அவர்கள் அவரை மாத்திரமே கண்டனர். ஆனால் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அவரோடு சென்றனர். ஏனென்றால் வேதமோ, "அவர் சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்" என்று கூறியுள்ளது. அவர் மேலேறிச் செல்கையில், அவர் தம்முடைய சபையோடு இணைகிறதை என்னால் காணமுடிகிறது.

104. இசையை இசைத்துக் கொண்டிருந்த அந்தக் குழுவிலிருந்து இரண்டு தூதர்கள் அங்குத் திரும்பிவந்து, "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? ஏனென்றால் எடுத்துக் கொள்ளப்பட்ட இதே இயேசுவானவர் மறுபடியும் வருவார்" என்று கூறினர். நிச்சயமாகவே! பின்னர் அவர்கள் மீண்டும் அந்த ஊர்வலத்தில் இணைந்து கொள்ள அவசரமாகச் சென்றுவிட்டனர்.

105. ஆகாய மண்டலத்தினூடாக இயேசுவும், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் சென்றனர். அவர்கள் சந்திரனைக் கடந்து சென்றனர். அவர்கள் சூரியனைக் கடந்து சென்றனர். அவர்கள் நட்சத்திரங்களைக் கடந்து சென்றனர். அவர்கள் அந்த மகத்தான காட்சிக்குள், அழகான வெண்மையான ஆகாய மண்டலங்களுக்குள் பிரவேசித்தபோது, பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களோ, "அநாதி கதவுகளே, உயருங்கள்; உயர்த்துங்கள்; அநாதிக் கதவுகளே

உயருங்கள்; உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்” என்ற இந்த வேத வாக்கியத்தை மேற்கோளிட்டு கூச்சலிட்டனர்.

106. அப்பொழுது பரலோகத்தின் படிக்கட்டுகளின் கைப்பிடி கம்பிகளண்டை எல்லாத் தூதர்களும் ஒன்றுகூடி, "யார் இந்த மகிமையின் இராஜா? ” என்று கேட்டனர்.

107. அதற்கு பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களோ, "அவர் சேனைகளின் கர்த்தரானவர், யுத்தத்தில் பராக்கிரமமுள்ள வராமே! ஒரு ஜெயவீரராயிற்றே!” என்றே பதில் உரைத்தனர்.

108. அப்பொழுது தேவதூதன் அந்தப் பெரிய பொத்தானை அழுத்த, முத்துகளினாலான வாசல்களோ சுழன்று திறந்தன.

109. அப்பொழுது அந்த மகா பெரிய பராக்கிரமமுள்ளவரான ஜெயவீரர் நேராக எருசலேம் நகரத்தினூடாக பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களைக் கொண்டு வருகிறார். தூதர்களின் கூட்டம் இசை இசைத்துக்

கொண்டும், ஆரவாரமிட்டுக் கொண்டுமிருக்கின்றனர். அவர் பராக்கிரமமுள்ள ஜெய வீரராயிருந்தாரே! அவருடைய பக்கவாட்டில் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்கள் தொங்கிக் கொண்டிருக்க, அவர் சிங்காசனத்தண்டைக்குத் தாம் விட்டுவந்த மகிமையின் ஸ்தலங்களுக்கு நேராகச் சென்றார். அப்பொழுது அவர், "பிதாவே, இதோ இவர்கள் இருக்கிறார்கள். என்றோ ஒரு நாள் நான் வருவேன் என்ற உம்முடைய வார்த்தையின் பேரிலான விசுவாசத்தில் அவர்கள் விசுவாசம் கொண்டிருந்தனர். நான் மரணத்தையும், பாதாளத்தையும் ஜெயித்தேன்" என்று கூறினார். சகோதரனே, அது என்னவாயிருந்தது? அவர் யுத்தத்தில் இருந்து வந்தார் என்று காண்பிக்கும்படியாக அவர் தம்முடைய கையில் தழும்புகளை உடையவராயிருந்தார். உன்னதத்திலுள்ள தேவனுக்கே மகிமை! அவரே அந்தப் பராக்கிரமமுள்ள ஜெய வீரராயிருக்கிறாரே ! அவர், "பிதாவே, இதோ அவர்கள்

இருக்கிறார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு" என்றார்.

110. அப்பொழுது அவரோ, "குமாரனே, நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்'' என்று கூறுவதை என்னால் கேட்கமுடிகிறது. சகோதரனே, என்றோ ஒரு நாள் அவர் மீண்டும் வருவார், அப்பொழுது அது என்னே ஒரு நாளாயிருக்கும்!

111. அவர் கல்லறையில் இருந்த போதும், அவர் வீணாயிருக்கவில்லை. அவர் அங்கே வெறுமனே மரித்தவராய் படுத்துக் கொண்டிருந்தார் என்றே நாம் நினைக்கிறோம். ஆனால் அவரோ இன்னும் தாழ இறங்கி ஜெயங்கொண்டு, அவர் தாழ இறங்கி சாத்தானிடமிருந்து திறவுகோல்களை கைப்பற்றினார். அவர் இன்றிரவு மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறார். எனவே அவர், “நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்” என்றார்.

# சகோ. பிரன்ஹாமுடைய நரகத்தைக் குறித்த தரிசனம்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: 65-12-05 இனி வரப்போகும் காரியங்கள்

130. நான் சிறுவனாயிருந்தபோது, நரகத்தைக்குறித்த ஒரு தரிசனம் கண்டேன். உங்களுக்குத் தெரியும், இன்றைய சீமாட்டிகள் (ஸ்திரீகள், நற்பண்பு கொண்ட சீமாட்டிகள் அப்படி செய்ய மாட்டார்கள்) எப்படி தங்கள் கண்களை ஓநாய்களின் கண்கள் போல் வர்ணம் தீட்டிக் கொள்கின்றனர் என்று. அவர்கள் கண்களின் கீழ் நீல நிறமுள்ள அந்த பொருள். அதை நான் கண்டேன். என் உயிர் போய்க் கொண்டிருந்தது. நான் சிறுவனாயிருந்த போது துப்பாக்கியால் சுடப்பட்டு, மருத்துவ மனையில் மரணத்தருவாயில் இருந்தேன். தேவன் இருக்கிறாரென்று நான் எப்பொழுதும் அறிந்திருந்தேன்.

நான் ஜெபிக்க முயன்ற என் முதல் ஜெபம் என் நினைவுக்கு வருகிறது. என்னால்

கூற முடிந்த ஒன்றே ஒன்று. இதை நான் முன்பு கூறினதில்லை. இப்பொழுது கூற ஏவப்படுகிறேன். நான் சுடப்பட்டு வயலில் மரணத் தருவாயில் கிடந்திருந்தேன். நான் தேவனிடம் செய்த ஒரே ஜெபம், ''கர்த்தாவே, நான் விபச்சாரம் செய்யவில்லையென்று உமக்குத் தெரியும்'' என்பதே. பாருங்கள்? பதினைந்து வயது சிறுவனாக, நான் நேர்மையாக நடக்க முயன்றேன். ''நான் சுத்தமான வாழ்க்கை வாழ்ந்து வந்திருக் கிறேன்.'' என்று மாத்திரமே என்னால் கூற முடிந்தது. அந்த தகுதியை மாத்திரமே என்னால் அவருக்களிக்க முடிந்தது.

131. அங்கு படுத்திருந்தபோது... மருத்துவர் என்னை விட்டு நடந்து சென்று விட்டார். நான் அந்தகார நித்தியத்துக்குள் அமிழ்ந்து போவதைப் போல் உணர்ந்தேன். நான் அப்பாவுக்காக கதறி, "ஓ, அப்பா, எனக்குதவி செய்யும்'' என்றேன். அங்கு அப்பா இல்லை. "அம்மா எனக்குதவி செய்யும்'' அங்கு அம்மா இல்லை. "தேவனே, எனக்குதவி செய்யும்'' அங்கு தேவன்

இல்லை. அது முடிவற்ற, பயங்கரமான, ஓ, திகில் மூட்டும் காட்சி. எரிந்து கொண்டிருக்கும் அக்கினி ஜுவாலை நரகத்தை அதற்கு அருகில் வைத்தப் பார்த்தால் அந்த அக்கினி நரகமே சுகமான ஒன்றாக இருக்கும். அதிலிருந்து விலகியிருப்பதென்பது மிக்க மகிழ்ச்சி அளிக்கும். அந்த காட்சியை கண்ட போது. ஓ, என்னே!'' என்று நினைத்தேன். அங்கு ஓரிடத்தை நான் அடைந்தேன்-புகை, இருள், வியாதி; ஓ அப்படிப்பட்ட ஒரு உணர்ச்சி. அது என்மேல் மரணமாயிருந்தது.

அந்த பெண்கள் இப்படி வர்ணம் தீட்டிய கண்களுடன் என்னிடம் வருவதை நான் கண்டேன். அது நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. எப்படியும் நாற்பது ஆண்டுகள் இருக்கும். அந்த பெண்கள் இப்படி ஊள... ஊள... ஊள... என்று சத்தமிட்டு சென்றனர் "நான் என்றென் றைக்கும் இங்கு இருக்கவேண்டுமா?'' என்று கேட்டேன்.

“என்றென்றைக்கும்”

132. அப்பொழுது நான், "ஓ, தேவனே, இங்கிருந்து வெளியே செல்ல என்னை அனுமதிப்பீரானால், நான் உம்மைக் குறித்து இனி வெட்கப்படவே மாட்டேன். நான் வெட்கப்படவே மாட்டேன். தேவனே, தயவு கூர்ந்து எனக்கு ஒரு தருணம் அளிப்பீராக" என்றேன்.

முதலாவதாக என்ன நேர்ந்ததென்றால் நான் மேலே வருவதைப்போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. மருத்துவருக்கு அது அதிசயமாயிருந்தது. ஏனெனில் என் இருதயம் ஒரு நிமிடத்துக்கு பதினேழுமுறை மாத்திரம் துடித்துக் கொண்டிருந்தது. என் இரத்தம் எல்லாம் உடலிலிருந்து வெளியேறி யிருந்தது. நான் என் இரத்தத்தில் படுத்துக்கொண்டிருந்தேன். என்றாகிலும் ஒரு நாள் பெண்கள் இவ்வாறு வர்ணம் தீட்டிக் கொள்ளுதல் நிகழும் என்று எண்ணினேன்.

133. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நான் டூசானில் குடியேறிய போது, என் மனைவியுடன் நான் ஜே.சி. பென்னி அங்காடிக்கு சென்றிருந்தேன். நான்

தலைகுனிந்த வண்ணம் அங்கு உட்கார்ந்து கொண்டு என் மனைவிக்காக காத்திருந்தேன். ஸ்திரீகள் கடைக்குச் சென்று வாங்கினால் எவ்வளவு நேரம் எடுப்பார்களென்று உங்களுக்குத் தெரியும். நான் தலை குனிந்த வண்ணம் இப்படி உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது தானாகவே இயங்கும் படிக்கட்டு (escalator) மேலே வந்து கொண்டிருந்தது. அதில் சில பெண்கள் "வாட்டர் ஹெட்' தலைமயிர் அலங்காரத்துடனும், கண்களில் இப்படி வர்ணம் தீட்டிக்கொண்டும் வந்து கொண்டிருந் தனர். அவர்கள் ஸ்பானிய மொழி பேசினர். அது - அது... அதெல்லாம்... அந்த தரிசனம் மறுபடியும் உண்டானது. அது அங்கிருந்தது (''ஊள... ஊள...'')

134. சகோதரனே, சகோதரியே, உங்களிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இப்பொழுது இது உங்களுக்கு கோமாளித்தனமாகத் தென்படக்கூடும். ஆனால் நீங்கள் அங்கு ஒருமுறை செல்வீர்களானால், அது ஆபத்தானது

என்பதை அறிந்து கொள்வீர்கள். அந்த வழியில் ஒருக்காலும் செல்லாதீர்கள்.

135. நான் வயதான ஒரு போதகர், நான் உலகம் முழுவதும் பிரசங்கித்திருக்கிறேன். எனக்கு லட்சக்கணக்கான நண்பர்கள் உண்டு. நான் மறுகரையில் உங்களோடு நிற்கவேண்டுமென்பதை அறிந்திருக்கிறேன். உலகத்தின் காரியங்களிலிருந்து விலகுங்கள். இப்பொழுது நீங்கள் நடந்து கொள்ளும் விதமாகவே நடந்து கொள்ள வேண்டுமெனும் விருப்பம் உங்களுக்குள் இருந்தால், உலகத்தின் காரியங்கள் உங்களில் இருக்கிறது. அப்படியானால் நீங்கள் தேவனுடையவர்கள் அல்ல. நீங்கள் ஒரு சபை அங்கத்தினர் மாத்திரமே. ஆழத்தை ஆழம் நோக்கிக் கூப்பிடும் வரைக்கும்... பாருங்கள்?

136. மீனின் முதுகில் துடுப்பு (fin) உண்டாவதற்கு முன்பே அது நீந்துவதற்கு முதலில் தண்ணீர் இருக்க வேண்டும். இல்லையென்றால் அதற்கு துடுப்பே இருந்திருக்காது.

மரம் உண்டாவதற்கு முன்பே, அது வளருவதற்கு ஒரு பூமி இருக்க வேண்டும். இல்லையென்றால் வளருவதற்கு மரமே இருந்திருக்காது... சிருஷ்டிப்பு உண்டாவதற்கு முன்பே சிருஷ்டிகர் ஒருவர் இருக்கவேண்டும்.

137. ''நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.'' அதில் ஏதோ ஒன்றுண்டு. சற்று முன்பு நீங்கள் உங்கள் கைகளையுயர்த்தி "எனக்கு இன்னும் அதிகமாக தேவன் வேண்டும்'' என்பதை தெரியப்படுத்தினீர்கள். பாருங்கள், தேவையுள்ள ஏதோ ஒன்றுள்ளது.

நீங்கள் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூர்ந்து அவ்வழியில் சென்றால் நீங்கள் விழுந்து போவீர்கள். பாருங்கள்? அதை விட்டு வெளியே வாருங்கள்! நீங்கள் ராஜாவின் குமாரரும் குமாரத்திகளுமாயிருக்கின்றீர்கள். நற்பண்புள்ள பெண்களும் ஆண்களுமாக இருங்கள். கிறிஸ்தவர்களைப் போல நடவுங்கள்; கிறிஸ்தவர்களைப் போல்

வாழுங்கள்; கிறிஸ்தவர்களைப் போல் நடந்து கொள்ளுங்கள், ஞாபகம் கொள்ளுங்கள்.

இந்த அறிவுரைகளுடன் உங்களை நான் நியாயத்தீர்ப்பில் சந்திப்பேன். பாருங்கள்?

138. இன்றிரவு உங்களை நிலைக்கண்ணாடியில் நோக்கி, ''நான் எந்த வழியாய் சென்று கொண்டிருக்கிறேன்? இயேசு எனக்காக ஒரு ஸ்தலத்தை- ஒரு சரீரத்தை-ஆயத்தம் பண்ணுகிறாரா? அந்த சரீரம் பரிபூரணமானது. அது ஒழுங்காக நடக்கும்; அது தேவனுக்கு முன்பாக குமாரனும் குமாரத்தியுமாய் இருக்கும். அந்த சரீரத்துக்குள் பிறப்பதற்காக இங்கு நான் பிரசவவேதனைப்படுகிறேன். நான் இன்னும் உலகத்தில் அன்புகூர்ந்தால், அங்கு எனக்கு சரீரம் இல்லையென்பதை அது காண்பிக்கிறது. நான் ஒரு சபை அங்கத்தினன் மாத்திரமே, நான் தேவனுடைய மரபு அணுவாகவே இல்லை... அவர் என் பிதா இல்லை'' என்று சொல்லுங்கள்.

139. ''நீங்கள் சிட்சையை சகிக்காமல் போனால் (அதுதான் இப்பொழுது உங்களுக்கு நடந்து கொண்டிருக்கிறது), நீங்கள் தேவனுடைய புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்கள்” என்று அவர் கூறியுள்ளார் . அது சரியல்லவா? (சபையார் ''சரி'' என்கின்றனர்- ஆசி) வேதம் அவ்வாறு கூறுகின்றதா? ("ஆமென்”)

வேதம் உங்களை சரிபடுத்துவதை நீங்கள் கண்டு, தேவனுடைய சிட்சை உங்களுக்குக் கிடைக்கும் போது, நீங்கள் அதை சகிக்காமல், "ஓ, அதை கேட்க எனக்கு விருப்பமில்லை. நான் ஒரு கிறிஸ்தவன். என் விருப்பப்படியே...'' என்று கூறுவீர்களானால், பரவாயில்லை, அப்படியே செய்யுங்கள். நீங்கள் தேவனுடைய பிள்ளையல்ல என்பதற்கு அது உறுதியான சான்று.

உண்மையான தேவனுடைய பிள்ளை எவரும் பசிதாகம் கொண்டவர்களாயிருப்பார்கள். ஏன்? உங்கள் இருதயத்திலுள்ள ஏதோ ஒன்று அது தேவையென்று உங்களிடம் கூறினால்,

உங்களை அங்கு இழுத்துக் கொள்ளும் துடிப்பு ஒன்றுள்ளது என்பதை அது காண்பிக்கிறது. அங்கு ஒரு சரீரம் உள்ளது, இங்குள்ள சரீரம் அதற்கு அடையாளமாய் உள்ளது. இந்த சரீரத்தை நீங்கள் எதற்காக உபயோகிக்கின்றீர்கள்? பிசாசையும், உலகத்தையும் அதன் வேஷத்தையும் மகிமைப்படுத்தவா? அல்லது நீங்கள் பரலோகத்தை நோக்குகின்றீர்களா? அங்கு ஏதோ ஒன்றுண்டு. உங்கள் வாழ்க்கையினால் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

''என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.''

140. இனி வரப்போகும் காரியங்கள். இப்பொழுதுள்ளவை இனி வரப்போகிறவைகளை அறிவிக்கும் அடையாளங்களாயுள்ளன. நாம் ஜெபம் செய்வோம்.

---



# ஏழு
# பரிமாணங்கள்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: என் ஊழியத்தின் தற்போதைய கட்டம், செப்டம்பர் 8, 1962, பத்தி எண் 19-31

# ஏழு பரிமாணங்கள்

உங்களுக்கு ஞாபகமுள்ளதா, அண்மையில் எனக்குக் கிடைத்த அந்த தரிசனத்தில் – அதை சிறு மறுரூபப்படுதல் என்று அழைக்க விரும்புகிறேன் – நான் மேலே எடுக்கப்பட்டு லட்சக்கணக்கான ஜனங்களைக் கண்டு, நான் திரும்பிப்பார்த்த போது, என் உடலைக் கீழே கண்டேன். "நான் இயேசுவைக் காண விரும்புகிறேன்" என்றேன்.

"அவர் இன்னும் உயரத்தில் இருக்கிறார்" என்றார்.

நல்லது, பாருங்கள், ஜனங்கள் மரிக்கும் போது, அவர்கள் உடனே தேவனிடம் செல்வதில்லை. உங்களுக்குப் புரியும் என்று நிச்சயமுடையவனாயிருக்கிறேன். ஒருக்கால்

என்னால் முடிந்த வரையில் அதை நான் உங்களுக்கு விளக்கித் தர வேண்டும். நீங்கள் அவசரமாக போக வேண்டுமா? நாம் நேரத்தை எடுத்துக்கொண்டு, கூடுமான வரையில் அதை தெளிவுபடுத்துவோம்.

நாம் இவ்வுலகிற்கு வரும்போது, இங்கு மூன்று பரிமாணங்களில் வாழ்கிறோம் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். அவை என்னவென்று என்னால் குறிப்பிட முடியுமா இல்லையாவென்று எனக்குத் தெரியவில்லை. அவைகளில் ஒன்று ஒளி, மற்றொன்று பொருள் (matter). டாமி, மூன்றாவது என்னவென்று ஞாபகமுள்ளதா? (யாரோ ஒருவர் ஏதோவொன்றை கூறுகிறார் – ஆசிரியர்) ஊ? ("அணு.") அணுவா? (வேறு யாரோ ஒருவர், "காலம்" என்கிறார்) காலம். சரி. இப்பொழுது, **ஒளி, பொருள், காலம். நமது ஐம்புலன்கள் இந்த பரிமாணங்களுடன் தொடர்பு கொள்கின்றன.** நமது பார்வை ஒளியுடன் தொடர்பு கொள்கிறது, நமது

உணர்ச்சி பொருளுடன் தொடர்பு கொள்கின்றது, இப்படியாக.

ஆனால் **விஞ்ஞானத்தின் மூலம் நாம் நான்காம் பரிமாணத்துடன் தொடர்பு கொள்கிறோம்**. இப்பொழுது இந்த கட்டிடத்தின் வழியாக படங்களும், வானொலி குரல்களும், தொலைக்காட்சி படங்களும் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளுடன் நமது புலன்கள் தொடர்பு கொள்ள இயலவில்லை. ஆனால் அவர்களிடம் ஒரு குழாயோ அல்லது ஒரு படிகமோ உள்ளது. அது ஈதர் அலைகளை கிரகித்துக் கொண்டு அவைகளைக் காண்பிக்கிறது. எனவே பாருங்கள், இந்த கட்டிடத்திற்குள்ளேயே, ஜனங்கள் புரியும் செயல்களும், காற்றிலே அவர்களுடைய குரல்களும் உள்ளன. அவை இங்குள்ளன. அது நமக்குத் தெரியும். அது முற்றிலும் உண்மை. நீங்கள் செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று; அவர்கள் அதை கிரகிக்க வைக்கின்றனர்... விஞ்ஞானம் கண்டுபிடித்த இவைகளை அவர்கள் எவ்விதம் செய்கின்றனர் என்று எனக்குப்

புரிவதில்லை. ஆனால் நான்காம் பரிமாணம் ஒன்றுண்டு என்பதை அது நமக்கு நிரூபிக்கிறது.

பாவி, அவிசுவாசி மரித்த பிறகு போகும் இடமே ஐந்தாம் பரிமாணம். அந்த ஐந்தாம் பரிமாணம் மிகவும் பயங்கரமான பரிமாணம். இந்த மனிதன்...

ஒரு கிறிஸ்தவன் மரிக்கும் போது, அவன் ஆறாம் பரிமாணத்துக்குச் செல்கிறான்.

தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார்.

அப்படியானால், பாருங்கள், கிறிஸ்தவன் மரிக்கும்போது, அவன் தேவனுடைய பலிபீடத்தின் கீழ், தேவனுடைய சமுகத்துக்குள், பலிபீடத்தின் கீழ் சென்று அங்கு இளைப்பாறுகிறான்.

இதை தனித்தனியே பார்ப்போமானால். ஒரு மனிதனுக்கு தீக்கனவு (nightmare) உண்டாகுமானால், அவன் முழுவதும் உறக்க

நிலையில் இல்லை, அவன் விழித்துக் கொண்டிருக்கவும் இல்லை. அவன் உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையே உள்ள நிலையில் இருக்கிறான். அது தான் அவனுக்கு பயங்கரமான நடுக்கம் ஏற்படும்படி செய்து, அவனை அலற வைக்கிறது. ஏனெனில் அவன் உறங்கிக் கொண்டிருக்கவில்லை, விழித்துக் கொண்டிருக்கிறான். அதை நாம் எடுத்துக் கொண்டால், மனம் மாற்றம் அடையாத ஒரு மனிதன் எங்கு செல்கிறான் என்பதை அது காண்பிக்கிறது. அவன் தன் காலத்தை வாழ்ந்து முடித்து விட்டு, உலகில் மரிக்கிறான். அவன் தேவனுடைய சமுகத்தில் செல்ல முடியாது. ஏனெனில் இரத்தம் இல்லாமல் அங்கு செல்ல அவன் தகுதியுடையவன் அல்ல. அவன் மாட்டிக் கொள்கிறான். அவனால் மறுபடியும் உலகத்திற்கு வரமுடியாது, ஏனெனில் உலகத்தில் அவனுடைய காலம் முடிந்து விட்டது. அவன் இடையிலே மாட்டிக் கொண்டு தீக்கனவைப் பெறுகிறான். பாருங்கள்? அவன் தேவனுடைய சமுகத்துக்குச் சென்று இளைப்பாற முடியாது. அதே சமயத்தில் அவனால் உலகத்திற்கு வரவும் முடியாது.

ஏனெனில் அவனுடைய காலம் முடிந்து விட்டது. அவன் தீக்கனவில் இருக்கிறான். அங்கே அவன் நியாயத்தீர்ப்பு நாள் வரைக்கும் இருக்கிறான். அதில் இருப்பது மிகவும் பயங்கரமான காரியம், பாருங்கள்.

இந்த தரிசனத்தில், நான் ஆறாம் பரிமாணத்துக்கு எடுக்கப்பட்டேன் என்று நினைக்கிறேன். திரும்பிப் பார்க்கும் போது, என்னால் காண முடிந்தது. பாருங்கள், அந்த பார்வை பூமிக்குரிய கண்களினால் காணும் பார்வையல்ல. அந்த பார்வை மேலானது... **அவர்களுக்கு அங்குள்ள பார்வை, நமது மாம்ச புலன்கள் தொடர்பு கொள்வதைக் காட்டிலும் மிக அதிக தூரம் தொடர்பு கொள்ள வல்லது.**

சில நாட்களுக்கு முன்பு அதை இங்கு விளக்கினேன். நான் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் கண்டேன். அவர்கள் ஒரு மனிதனை கடலில் இரண்டு மைல் அல்லது ஒரு மைல் ஆழத்தில் இறக்கி விட்டனர். ஒளிக்கதிர்கள் அங்கிருந்து புறப்பட்டு சென்றன.

அவர்கள் கடலில் வாழும் பிராணிகளைக் காண்பித்தனர். அப்பொழுது ஒரு மீன் வந்தது – விகாரமாகத் தோற்றமளித்த ஒன்று. அது நள்ளிரவு, அங்கு மிகவும் இருட்டாக இருந்தது. அவைகளுக்கு மூக்கில் பாஸ்வரம் (phosphorus) இருந்தது, கண்கள் இல்லை. அவை இரை தின்ன வேண்டும். எனவே அவை இரை தேட வேறொரு புலன் மூலம் வழிநடத்தப்பட்டன. கண் பார்வையினால் அல்ல. ஏனெனில் அங்கு உபயோகிக்க அவைகளுக்கு கண்கள் இல்லை. தங்கள் இரையைக் கண்டுபிடிக்க, அவை வேறொரு புலன் மூலம் வழிநடத்தப்பட்டன. "நான் மாத்திரம் என் பார்வையினால் அந்த மீனை கட்டுப்படுத்த முடியுமென்றால், அதை வெவ்வேறு இடங்களுக்கு நடத்திச் சென்று, எவ்வளவு அதிகமாக அதற்கு இரையை அளிக்க முடியும்? அது தொடர்பு கொள்ளும் "ரேடாரை"க் (radar) காட்டிலும் என் பார்வை எவ்வளவு மேலானது" என்று எண்ணினேன்.

அப்பொழுது எனக்கு இது மனதில் தோன்றியது: "நான் மாத்திரம் என்னை

முழுவதுமாக தேவனிடம் அர்ப்பணித்தால், தேவனுடைய பார்வையும் புலன்களும் எவ்வளவு அதிகம் சக்தி வாய்ந்தவை! நாம் காண்பவைகளைக் காட்டிலும் இன்னும் அதிகமாக நம்மை வழிநடத்தக்கூடியவர் யார்? ஏனெனில் அவர் நமக்களிக்கும் விசுவாசம் நம்முடைய கண்களினால் நாம் காணாதவைகளின் நிச்சயமாக இருக்கிறது." அந்த மீன் மற்ற மீன்களைப் போலவே மேலே வர முடியாது. ஏனெனில் அது அழுத்தம் கொண்டுள்ளது. அதை நீங்கள் மேலே கொண்டு வந்தால், அது வெடித்து விடும் – நாம் உயர செல்லும்போது, வெடிப்பதை தடுக்க முடியாதது போல. நாம் வாழும் இடத்துக்கு ஏற்றவாறு அழுத்தம் கொண்டுள்ளோம்.

அந்த சிறிய மீன் மாத்திரம் இங்கு வந்து என்னைப் போல ஆக நேர்ந்தால், அது மறுபடியும் அந்தகாரத்துக்கு சென்று சிறு மீனாக இருக்க விருப்பம் கொள்ளுமா? அதற்கு மறுபடியும் மீனாக இருக்க விருப்பம் இருக்காது; ஏனெனில் அது மீனைக் காட்டிலும் உயர்ந்தது, அது ஒரு மனிதன். அதன் புலன்கள்


உயர்ந்தவை, அதன் புரிந்து கொள்ளும் தன்மை மேலானது, அதன் அறிவு உன்னதமானது. அதை ஒரு கோடியில் பெருக்குங்கள், அதை தான் நீங்கள் இங்கிருந்து மேலே தேவனுடைய சமுகத்துக்கு செல்லும்போது பெறுவீர்கள். அப்பொழுது ஒரு மனிதன் இங்கிருந்ததைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையை அடைவான். நீங்கள் மறுபடியும் மனிதனாக இருக்க, வியாதியும் அழிவும் நேரிடக்கூடிய பூச்சரிக்கும் இந்த சரீரத்தில் வாழ, ஒருபோதும் விரும்ப மாட்டீர்கள். நான் முப்பது ஆண்டுகளாக உலகம் முழுவதும் இந்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களிடம், ஆதாயமாகப் பெற்றுக் கொள்ள பரலோகம் ஒன்று உண்டென்றும், நாம் புறக்கணிக்க வேண்டிய நரகம் ஒன்று உண்டென்றும், உங்களை நேசிக்கும் தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், மீட்கும் வல்லமை ஒன்று உண்டென்றும், அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயுள்ள எந்த நேரத்திலும் உங்களிடம் வர அது காத்திருக்கிறது என்றும் கூறி வந்திருக்கிறேன்.

இதுவே என் இருதயத்தில் இருந்து வந்திருக்கிறது.

தண்ணீரில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஒரு மனிதன் அங்கு ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, “அந்த கயிற்றை பிடித்துக் கொண்டு என்னால் மேலே வர முடியும். ஆனால் அந்த கயிற்றைப் பெற நான் பாத்திரன் அல்ல” என்று சொல்வது போல்.

நீங்கள் தண்ணீரை விட்டு வெளியே வந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துக்காகவே அந்த கயிறு அங்கு வைக்கப்பட்டுள்ளது. பாவிகளை இரட்சிக்க வேண்டும் என்னும் நோக்கத்துக்காகவே இயேசு கிறிஸ்து மரித்தார். அவர் நித்திய ஜீவன் என்னும் கயிற்றை தொங்க விட்டிருக்கிறார். அது இன்றிரவு ஒவ்வொரு பாவியின் தலை மேலும், “அதை விட்டு வெளியே வா” என்று எழுதப்பட்டுள்ள வரவேற்பு அட்டையுடன் ஆடிக்கொண்டிருக்கிறது. அப்படி செய்ய நீங்கள் விரும்பினால், அதற்கான ஆயத்தம் செய்யப்பட்டு விட்டது.

அந்த இடத்தையும், இந்த உலகம் நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலையில் அந்த ஜனங்களையும் நான் கண்ட போது, அது மிகவும் மகிமையாயிருந்தது. அங்கு பாவம் இருக்க முடியாது, மரணமோ அல்லது வேறெதுவோ அந்த இடத்தில் நுழைய முடியாது. அங்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமில்லை, இனச்சுரப்பிகள் அவர்களை விட்டுப் போயிருந்தன. அங்கு விபசாரமோ மற்றெதுவோ இருக்க முடியாது. ஆனால் ஒரு பெண் தன் பெண் உருவத்தையும், ஒரு ஆண் தன் ஆண் உருவத்தையும் கொண்டிருந்தனர். அவர்கள் சதாகாலங்களிலும் அப்படியே இருப்பார்கள்.



# ஏழு பரிமாணங்கள்

1. முதலாவது பரிமாணம் – ஒளி
2. இரண்டாவது பரிமாணம் – பொருள்
3. மூன்றாவது பரிமாணம் – காலம்
4. விஞ்ஞானத்தின் மூலம் நாம் நான்காம் பரிமாணத்துடன் தொடர்பு கொள்கிறோம்
5. பாவி, அவிசுவாசி மரித்த பிறகு போகும் இடமே ஐந்தாம் பரிமாணம்
6. ஒரு கிறிஸ்தவன் மரிக்கும் போது, அவன் ஆறாம் பரிமாணத்துக்குச் செல்கிறான்
7. தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார்





# ஆவி உலகம்

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

